# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 04/2016

ஆணை எண். 76/2016

நாள் : 20/04/2016

**திரு. எஸ். செந்தில்,**
**எம். 116, மாணிக்கம்பாளையம்**
**ஹவுசிங் யூனிட்,**
**ஈரோடு – 638 009.** — **முறையீட்டு மனுதாரர்**

**துணை மேயர் / மண்டல தலைவர்,**
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு. — **எதிர் மனுதாரர்**

**ஈரோடு மாநகராட்சி, எம். 116, மாணிக்கம் பாளையம் ஹவுசிங் யூனிட் என்று முகவரியிட்டு திரு. எஸ்.செந்தில் என்பவரின் புகார்மனு, மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலம் பெறப்பட்டு 04/016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக இம்முறைமன்ற நடுவத்தில்** பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

ஈரோடு மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலத் தலைவர் ஆகியோர் தடைசெய்யப்பட்ட லாட்டரியை விற்பனையை செய்து வருவதாக தெரிவித்து, திரு. எஸ். செந்தில் என்ற பெயரில் பெறப்பட்ட புகார் மனுமீது ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரின் அறிக்கை பெறப்பட்டது. ஈரோடு மாநகராட்சியில் லாட்டரி விற்பனை முழுவதுமாக தடைசெய்யப்பட்டுள்ளது என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திரு. எஸ்.

செந்தில் என்பவர் குறிப்பிட்ட முகவரியில் இல்லை என்றும், இப்புகார் மனு அரசியல் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். எனவே இந்நேர்வு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக் கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்.

பெறுநர்

துணைச் செயலாளர்,
ந.நி (ம) கு. வ. துறை,
சென்னை – 600 009.
(கடித எண்.30825/தேர்தல்/2015,
நாள் 22.12.2015 சம்பந்தமாக)

காவல் துறை கண்காணிப்பாளர்,
ஈரோடு மாவட்டம்,
ஈரோடு.